# கோலிக்குண்டு ஆடலாம்

குழியை நோக்கிக் கவனமாய்க்
குறியை வைத்து விரல்களால்
குழிக்குள் காயைப் போட்டிடும்
கோலிக் குண்டு ஆடலாம் !

கோலிக் குண்டு ஆடியே
குறியை வைத்துப் பழகினால்
நாளை ஒருநாள் சுடுவதில்
நல்ல திறமை காட்டலாம் !

எதையும் எண்ணி எண்ணியே
எண்ணம் சிதறி விடாமலே
இலக்கை நோக்கிச் செய்திடும்
எல்லாச் செயலும் வெற்றிதான்

கோலிக் குண்டு ஆடிடும்
குறும்புக் காரச் சிறுவனே
வேலி இல்லா வானிலே
நாளை ராக்கெட் ஓட்டுவான்.

- ஆசிரியர் - 'சிறுவர் இலக்கிய மாமணி' கவிஞர் செல்லகணபதி